நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

**C.C. No.194/2023**

**P.W. 1 –ன் வாக்குமூலம்**

**(அரசுதரப்பு சாட்சி )**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | பொன்னுசாமி |
| தந்தை / கணவர் பெயர் | : | மாரப்பன் |
| கிராமம் | : | விருதாசம்பட்டி |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW 1** |
| வயது | : | 51 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று* ***2025–ஆம் வருடம், ஜுலை மாதம், 03–ம்ஆம் தேதி*** பதிவு *செய்யப்பட்டது.*

**எதிரிகள் ஆஜர் அவர்களது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 01.22PM)

1. நான் தற்போது மேட்டூர் வட்டம் விருதாசம்பட்டி கிராமம் கந்தனூரில் குடியிருந்து விவசாயம்செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகள் என்னுடைய பக்கத்து விவசாய நிலத்தை சார்ந்தவர்கள் ஆவார்கள். எங்கள் விவசாய நிலத்தில் உள்ள தடம் சம்பந்தாக எங்களுக்கும் ஆஜர் எதிரி குடும்பத்தாருக்கும் பிரச்சினை இருந்து வருகிறது. அது சம்பந்தமாக உரிமையியல் வழக்கு உள்ளது.

2. கடந்த 26.05.2021ம் தேதி காலை 8 மணி அளவில் வழக்கம் போல் நான் எனது கரும்பு தோட்டத்திற்கு தண்ணீர் பாய்ச்ச சென்றேன். அப்போது என்னுடைய விவசாய நிலத்தில் இருந்த கருக்கட்டான்மரம், சீதாமரம், பொரசன் மரங்களை தேவகி, செங்கோடன், பிரகாஷ் ஆகியோர் வெட்டி கொண்டிருந்தனர். அவர்களை பார்த்து நீதிமன்றத்தில் வழக்கு இருக்கும்போது ஏன் மரங்களை வெட்டுகிறீர்கள் என்று கேட்டேன். அதற்கு அவர்கள் அப்படித்தான் வெட்டுவேன். மேலும் அவர்கள் தேவடியா பையா கண்டவனுக்கு பிறந்தவனே என்றும் தகாத வார்த்தையால் திட்டினார்கள்.

3. பின்னர் செங்கோடனும் , தேவகியும் என்னை பிடித்து கொண்டணர். பிரகாஷ் கீழே கிடந்த கட்டையை எடுத்து எனது இடது கையில் மணிகட்டுக்கு மேல் அடித்தார். அதில் லேசான ரத்தம் காயம் ஏற்பட்டது. முதுகின் மேல் அடித்தார்கள். சத்தம் போட அருகில் இருந்தவர்கள் வந்து என்னை சிகிச்சைக்காக மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றனர்.

4. நான் சிகிச்சையில் இருந்தபோது இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பெற்றனர். என்னிடம் காட்டப்படும்

புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். (**புகார் வாக்குமூலம் அ.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

**கற்றறிந்த எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜரில் இருந்தும் உரிய வாய்ப்பு அளிக்கப்பட்டும் குறுக்கு விசாரணை இல்லை.**

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–01.37PM.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்,**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**